VI. அந். 28

நீதி ட

வதநாயகர் அந்தாது



2326

ரு சரவண பவானந்தர்.

"நீதிபதி"

வேதநாயகர் அந்தாதி

தமிழிசைக் கலா வல்லுநர்,

திரு. சரவணபவானந்தர்

இயற்றியது.

வெளியீடு:

விற்பன்னர் பதிப்பகம்

22, மலையப்பன்தெரு, மண்ணடி.

சென்னை - 1.

GIF
O-,1A Sal.1

உரிமை ஆசிரியருடையது.

அணா 6

குரு காணிக்கை.

இராமநாதபுரம், சேது சமஸ்தானம், முதுகுளத்தூர், திரு, பிச்சைக் கவிஞர், என்னும், அச்சமில் அருட்புலவர் அவர்களே, எனது இளமைப் பருவத்தில் எனக்கு வெண்பா விதி முதலியன சொல்லிவைத்து வெற்றிக்குரித்தான பெற்றிபலவும் பெறச் செய்தவர்கள் அவர்களது மாணிக்கத் திருவடிகளுக்கு இந்நூல் ஒரு காணிக்கையாகட்டும்.

அன்பு,

சரவணபவானந்தா

Jyothi Printers, G. T., Madras.

சிறப்பு

*

ஆ. ம. நடராஜகவி அவர்கள்

முத்தமிழ் வித்துவான், சிதம்பரம்

வெண்பா.

பார்மேவும் நீதி, பதிவேத நாயகர் மேல்
சீர்மேவும் அந்தாதி செப்பினன்—தார்மேவும்
தன்னிகரில் ஞான சரவணப வானந்தன்
இந்நூலுக் கெந்நூல் இணை.

நீதிபதி அந்தாதி வெண்பா மாலை. இது மாயவரம் முனிசிப் விற்பன்னர் வேத நாயகம் பிள்ளை அவர்கள் மேல் பாடியது. இதை இயற்றியவர் அருட்பா கதா காலட்சேப வல்லவராகிய தமிழிசை அறிஞர் சுவாமி சரவண பவானந்தர். இவர் எனது அன்புமிக்க நண்பர். இருபதாண்டுகளாக என்னுடன் பழகியவர். சைவகுலம். ஸ்ரீமதி வள்ளியம்மை, திருவாளர் துரைசாமி யென்பவர்க்கு அருளுடைய பிள்ளையாய் நாகையிற்பிறந்து ஸ்ரீ. ல. ஸ்ரீ பிரம்மமுடி சுவாமிகளிடத்து ஞானோபதேசம் பெற்று இளமை தொட்டே முருகன் திருவருளால் கவி பாடும் சக்தியடைந்து திருவருட் பிரகாச வள்ளலார் மீது நீங்காத பக்தி கொண்டு சிறந்த கதா காலட்சேபபோதகராகி தமிழிசை சம்பந்தமாய் பல சிறந்த பாடல்களும் இயற்றிய தியான புருஷர்.

பல்லாண்டுகளாகத் தமிழுலகம் மறந்திருந்த மாயூரம் ஸ்ரீவேதநாயகம் பிள்ளையவர்களுக்கு பல நல்லறிஞர்களைக் கொண்டு விசேஷ விழாக்கள் கொண்டாடியதோடு அவர் மேல் நல்ல சீரிய பாக்களையும் நிறைய செய்திருக்கின்றார். இவர்வாக்கு வெகு சரளமானது. கண்ணாடியில் உளுந்

துருட்டும் பான்மையாய் தங்குதடையில்லாமல் கூட்டிக் குறைத்துத் திருத்தி பாட்டையமைக்காமல் ஒவ்வோ ரெழுத்தும் தானே முன்வந்தியற்கையாய் இவர்க்கு அமைந்துள்ள தென்பது மிகையாகாது. இவர் செய்த பல நூல்களில் இதுவே எவரும் ஒப்புக்கொள்ளும் தலை சிறந்த தமிழ் நூலாகும். பெரும்பாலும் அடை மொழி இல்லாத இந்தப் பாடல்களை ஆதியந்தமாக உற்று நோக்கு மிடத்து ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை அவர்கள் வடிவமும் சரித்திரமும் இதில் நன்கு புலனாகும். சிந்திக்குமிடத்து அவரது ஆன்ம ஒளியே இவர்க்குட் புகுந்து இந்நூல் இயக்கி முடித்த தென்றும் கூறலாம். தனிப்பாக்கள் பாடுவதில் இவர் சமர்த்தர்.

பொதுவாகவே இவருக்கு ஒரு போதம் உண்டு. அதனாலேயே இவர் செய்வன செய்யும் போது இவரையும் அறியாமல அமைய வேண்டியது செவ்வனே திரு வருளால் அமைந்து விடும் மேலும் பாடல்களைத் தான் செய்யும் போதோ அல்லது பிறர் பாடக்கேட்கும் போதோ தன்னையும் அறியாமல் உடல் நெகிழ்ச்சியும் கண்ணீருகுத்தலும், தேகப்புள காங்கிதமும், அடிக்கடி இடையிடையே இவருக்கு நிகழும் பழகினோரிதை நன்கு அறிவர்.

இவர் ஜோதி இராமலிங்கசுவாமிகள் திரைப்படத்தில் தொழுவூர் வேலாயுத முதலியாராக நடித்து நற்புகழ் பெற்றிருக்கின்றார். இலக்கியச் சுவை நனி சொட்டச் சொட்டப்பாடும் இன்னவரது தமிழ் நடையே தனி நடை தான் தெய்வ பக்தியுடைய இவரும் இவரது குடும்பமும் நீடூழி வாழ்க, ஓங்குக இவரது நற்றமிழ்.

இங்ஙனம்,

ஆ. ம. நடராஜ கவி.

உ

திருவருள் துணை

மாயூரம், தமிழ் இசைக் கலா வல்லுநர்

திரு. சரவணபவானந்தர் அவர்கள்

இயற்றிய

“நீதிபதி”

வேதநாயகர் அந்தாதி.

அருட்ஜோதி அரண்.

நேயமிகும் உண்மை' நீதி பதிவேத
நாயகர்அந் தாதி நவிலுதற்கு—தூய்மையுடன்
மேதினியில் இன்ப விளக்கம் தருஞான
ஜோதியருட் ஜோதி துணை.

நூல்

1. சொல்லும் ஒருபெரிய சோழ வளநாட்டுச்
செல்வமே! ஞானத் திலகமே!—வல்லதமிழ்த்
தாயகமே! ஜீவ தனமே! திருவேத
நாயகமே! வாழ்வருளிந் நாள்.

---

1. “சோழ வளநாடு சோறுடைத்து”—ஔவை. “வேத நாயகம்” என்னும் பெயர் தாய் தந்தையர்களால் சூட்டப்பெற்ற ஆதி பெயரேயாகும்.

2. நாளும் புகழ்வேத நாயகமே! நீயெனக்கிந்
நீளுலகில் நல்ல நிலையருள்வாய்—கோளறுமெய்ச்
சந்தச் சிரகிரியைச் சார்ந்த குளத்தூரில்
வந்தே அவதரித்த வா.

3. வாவென் றழைக்கின்றேன் மாறாத பேரன்பைத்
தாவென்று கேட்கின்றேன் தாதாவே!—பாவொன்றே
எத்தனையோ பாடி இதமளித்தாய் இப்போதிங்
கத்தனையும் தேவாமு தம்.

4. அமுதே! என் அன்பே! அரசே! பொருட்சார்
சமரச ஞானத் தருவே!—அமைவுறசற்
பாத்திரமே! கங்கைகுல பாக்கியமே! என்றனிரு
நேத்திரமே! நின்மொழியே நேர்.

5 நேரான வாழ்வும் நிலையான செல்வமும்
தாராள உள்ளமும் தந்தருள்வாய்—சீராரும்,
மூவேந்தர்க் காதி முடிசூட்டும் ஓர் குடியின்
கோவே! அருட்கருணை கூர்ந்து.

---

2. சிரகிரி, என்பது திருச்சிராப்பள்ளி—குளத்தூர். திருச்சியினின்றும் திண்டுக்கல் செல்லும் ரயில் பாதையில் 3வது வண்டி நிலையம்.

(3) ஆயிரக்கணக்கான பாடல்கள் இயற்றியுள்ளார் அத்தனையும் இனிமைபயப்பனவாகவே அமைந்துள்ளது.

4. கங்கை குலம். வேளாளர் மரபு.

5. சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர் குடிக்கும் முடிசூட்டி வைக்கும் ஓர் முதன்மையான பாரம்பரியில் வந்தவர்.

6, கூர்ந்து கவனிக்கில் கோங்குடைய ராயரினைச்
சார்ந்து வருமரபில் தான்வந்தோய் !—ஆர்ந்தபுகழ்
என்றும் நிலைத்திடவே ஏற்ற வரம்பெற்றாய்
நன்றுநன்று சாலவும் நன்று.

7. நன்றே ! என் ஜீவ நதியே ! நளினகுணக்
குன்றே ! இசைபேசும் கோகிலமே !—வென்றிநிலை
நாட்டும் திருமதுர நாயகரை நேரியமுப்
பாட்டனெனப் பெற்றாய் பயன்.

8. பயனுடைய சொல்லே பயின்று கடவுள்
நியமங்கோணுது நிலைத்த—தயவுடையாள்
மன்னும்ஆ ரோக்ய மரியின் தவப்பயனாய்ப்
பொன்னாய்ப் பிறந்தாய்அப் போது.

9. போதுமெனச் சொல்லும் புகழுள்ளம் வாய்ந்தஉன்றன்
மீது மயல்கொண்டேன் மேதினியில்—நாதா !
சவரிமுத் தீன்ற சதுரகவிப் பேரா !
கவுரவம் தந்தென்னைக் கா.

---

6. கொங்குராயர் கோத்திரம், என்பது பரம்பரையாய் வந்த ஒரு பட்டப் பெயர்.

7. மதுரநாயகம் பிள்ளை என்பவர், ஆதியில் சைவ வேளாளர் குடும்பத்தில் வந்தவர், தமக்குற்ற சூலை நோய் நீங்கியதன் காரணமாய் கத்தோலிக்க கிருஸ்துவ மதத்தைத் தழுவலானார்.

8. ஆரோக்கிய மரியம்மாள், நாயகரை என்ற நற்றாய். கற்பிலக்கணம் வாய்ந்தவர்கள். கல்வியறிவுடன் கடவுள் பக்தியும் நிரம்பியவர்கள்.

9. சவரிமுத்துப் பிள்ளை. நாயகரின் செல்வத்தந்தை. குண நலன் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவர், நிரபுருஷன் —

10. காக்கக் கடனுனக்கே கத்தோலிக் கென்னுமுயர்
நோக்கக் கிருத்துவத்தின் நோன்புடையோய்!—ஆக்க
ஒன்று திரண்ட ஒருமார்க்கம் சன்மார்க்கம் [மெலாம்
என்றுகண் டாயே! இதம்.

11. இதமே சதமென்றும் எம்மதமும் என்சம்
மதமே எனத்துணிந்தும் வாழ்ந்தோய்!—பதமுடனே
ஆதிகுரு நாதன் அருள் தியாகன் ஆகவித்தை
மேதினியில் பெற்றுய்கை மேல்.

12. மேலான வாஞ்சை மிகுத்த அடைக்கலத்தின்
பாலான அன்பு பளிச்சிடவே—சாலையிலே,
கட்டித் தழுவிக் கவிபாடிப் போற்றியநின்
கெட்டித் தனமென்னென் கேன்.

13. என்னருமைக் கண்ணே! எழிற்புலமை சால்உனை என்
சின்ன வயதுமுதல் தேர்ந்தறிவேன்—பன்னுதமிழ்க்
கந்தம்மணக் குங்கவி கம்பனெனும் மீனாட்சி
சுந்தரரைக் கொண்டதென்ன தூது.

---

10. நாயகர், கிருஸ்துவ பண்பாட்டில் கொஞ்சமும் நழுகாதவர், எனினும் சன்மார்க்கம் என்னும் பொது நோக்குடையவர்.

11. திருச்சி, தியாகப்பிள்ளை, இவர் வழக்குமன்ற மொழி பெயர்ப்பாளர், நாயகரின் ஆரம்ப ஆசிரியர், தமிழும் ஆங்கிலமும் பயிற்றுவித்தவர்.

12. அடைக்கலசாமிப் பிள்ளை, இவர் நாயகரின் பெரிய தாயின் பிள்ளை. குளத்தூர் முத்துவேற் பிள்ளையின் குமாரர். இவரை திருச்சியில் ஒரு சமயம் கண்டபோது நாயகர் கனிந்து பாடிய கவி. "சீர்பெருகு குளத்தூர் வாழ் அடைக்கல அண்ணு! கருணை தியாகா! வாகா!.........(விற்பன்னர் வரலாறு).

13. திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், நாயகரின் நீதி நூலுக்கு சாத்துக்கவி பெறவேண்டி,

14. தூதுக் கமைந்த துணைவருமே அம்பலத்தில்
சாது இராமலிங்க சாமியைக்கண்—டோதியதும்,
ஆங்கிருந்து பெற்ற அருட்சோதி மெய்ச்சாத்தும்
ஈங்கு நினைக்கில்இன்ப மே.

15. இன்பப் பெருக்காய் எழுந்தவொரு கோவையினை
அன்புக் கனியாய் அணிந்தனை நீ—பின்பும்,
முடிகொண்டான் பாரதியார் மோகித்துப் பாடக்
கெடிகொண்டாய் மேருவெனக் கேட்டு.

16. கேட்டால் அதிசயமே கேடில் திரிசைமலைக்
கோட்டால் விளைந்தஒரு கூர்வழக்கை—எட்டால்
எளியதொரு பாட்டால் எதிர்த்துவெற்றி பெற்ருய்
களிபே ருவகைகொண்டேன் கண்டு.

சிதம்பரத்தில் தங்கியிருந்த இராமலிங்க சுவாமிகளிடம் சென்று உற்றது கூறினர்.

14. இராமலிங்க சுவாமிகள் வேதநாயகரின் ஆதிநூலாகிய "நீதி நூலுக்குக் கொடுத்த சாத்துக்கவி. "வளங்கொள் குளத்தூர் அமர்ந்த வேதநாயகன் அருளால்.. ......(விற்பன்னரின் விரிவான வரலாற்றில் காண்க).

15. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் நாயகர், "குளத்தூர் ஐந்திணைக்கோவை" பாடப்பெற்ருர். மற்றும் "முடிகொண்டான் பாரதியார்" என்னும் ஆனதாண்டவபுரம் கோபாலகிருஷ்ண பாரதியாரால் "நீயே புருஷமேரு" எனப் புகழ்ந்துரைக்கப் பெற்ருர்.

16. திரிசிரபுரம் மலைக்கோயில் சம்பந்தமாய் நிகழ்ந்த பெரிய வழக்கொன்றை, நாயகர் எழுத்துமூலம் மிக எளிதாய் தீர்த்து வைத்தார். அதைக்குறித்து மகாவித்வான் பிள்ளையவர்கள் அரிய ஒரு கவி பாடினர். "மையேறு கண்ணி ஒரு பாகன்......கையே உனைப்புகழ்வேன் புகழ்வேறில்லைக் கண்டு கொள்ளே." (வி வரலாறு).

17. கண்டார் புகழும் கனதரங்கைச் சீகாழி [தில்,
கொண்டாடும் நீதிபதிக் கோனன்றே ?—மண்டலத்
தின்னும் பெருமையுற்றுய் பெற்றிமிகும் மாயூரம்
என்னுமென்றன் ஊரில் இருந்து.

18. இருந்தே பொருந்த இயற்றினைப் பன்னூல்
திருந்தும் வழியும் திறந்தாய்—அருந்தமிழில்
ஆதிநூற் சேற்ப அறுநூறு பாடியநின்
நீதிநூல் பொன்று நிதி.

19. நிதியே ! நிறைமதியே ! நேர்மைமிகும் நீதி
பதியே ! முழுமெய்ப் பயனே !—துதிநிலவும்,
ஆரணத்தின் பேராய் அமைந்த ஒருபெரிய
காரணத்தை என்னென்பேன் காண்.

20. காணரிய பஞ்சம் கதிகலங்கச் செய்திடவே
ஊணின்றி மக்கள் உயிர்வாடத்—தோணும்,
இடமெல்லாம் கூழ்ச்சாலை ஏற்படுத்தி இன்மைத்
தொடராது செய்தனை நற் றெண்டு.

---

17. வேதநாயகர் 1857ம் ஆண்டில் தரங்கம்பாடியிலும் 1858ல் சீகாழியிலும், 1860 முதல் 1872 வரை மாயூரத்திலும் முனிசீப் உத்தியோகம் வகித்து நேரிய முறையில் நீதி வழங்கினர்.

18. 1858ம் ஆண்டில், நாயகர் சீகாழியில் உத்தியோகம் வகித்தபோது "நீதி நூல்" செய்தார். அவை ஆரம்பத்தில் 44 அதிகாரங்களுடன் 400 பாடல்களில் 1859ல் அச்சியற்றி புத்தக வடிவில் வெளிவந்தன. பின்னர் 200 பாக்கள் சேர்த்து 600 பாக்களுடன் 1860ல் இரண்டாம் பதிப்பாக நீதி நூல் வெளிவந்தது.

19. ஆரணப் பெயர்—வேதநாயகம். அமைந்த இயற்கைப் பெயர்க்கேற்ப எல்லாம் பொருந்தியவர்.

20. சென்ற 75 ஆண்டுகளுக்கு முன்னே வந்த தாது ஈஸ்வர வருடத்துப் பஞ்சத்தின்போது நாயகர்; மாயூர நகரமெங்கும் கஞ்சி

21. தொண்டன்று நல்ல துணைசெய்த தின்றதனைக்
கொண்டிங்குப் பஞ்சம் குலைந்திடவே—பண்டுநீ
பாடியவோர் உண்மையருட் பாடலினைப் பாடுகின்
நீடு நலமருள்க நீ. [றேன்

22. நீயே உலக நிலையதனை நன்குணர்வாய்
தாயே அனைய தயவுடையாய்!—நேயமுடன்
முன்னே பொழிய முகிலைப் பணித்தனையால்
என்னே! நின் பாட்டின் இயல்பு.

23. இயல்பாய் அமைந்த இசையுடனே தானே
சுயமாக நாற்கவியும் சொன்னாய்—வயமீறி
வெப்பத்தால் மக்கள் வெதும்பியபோ தோர்பாடல்
செப்பத்தான் பெற்றனைநற் சீர்.

தொட்டிகள் அமைத்து ஆங்காங்கும் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உண்டி கொடுத்து உடை கொடுத்து உயிரையும் கொடுத்து உதவினர். அதைக் குறித்து அன்று தொட்டு இன்று வரை சாந்திடிக்கும் ஏழை மக்களும் பாடுவார்கள். "ஏழைக்கிரங்கிடும் நல்வேத நாயகர் எப்போ வருவாரோ கச்சேரிக்கு......" என்று (விற்பன்னர் அற்புத கீதம்).

21. பஞ்சம் தெளிய பாடிய பாடல் "பஞ்சம் தீராயா உனையன்றி தஞ்சம் ஆரையா" (சர்வ சமய சமரசக்கீர்த்தனை).

22. மழையில்லாது மக்கள் வருந்தியபோது பாடிய பாடல் "காரே உன் நீரையெல்லாம் கள்வன் கவர்ந்தானோ ?......" (விற்பன்னர் வரலாறு).

23. விற்பன்னர் ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம், ஆகிய நான்கு கவிகளும் பாடக்கூடியவர். ஒரு சமயம் வெப்பந்தாளாது மக்கள் வாடி வதங்கியபோது பாடியது. "சூரியா நின்பரிகள் சோம்பல் மேற்கொண்டனவோ ?......" (வி-வரலாறு).

24. சீராரும் உன்றன் திருவாய் மொழிப்படியே
நேரான ஆட்சி நிலைத்ததுடன்—பாரில்
தமிழும் இசையும் தழைத்ததிது போதே
அமுதமொழி தன்னையுணர்ந் தார்.

25. ஆரும் அதிசயிக்கும் அற்புதநன் னாவலொன்று
பேரும் பிரதாபர், பின்னும்பல்—தாரணியில்
கற்பனை மிக்கக் கதைகளினால் நாட்டிற்கு
நற்பயனை ஈந்தாய் நயந்து.

26. நயந்தரும் சொல்லே நவின்று புவியில்
செயந்தரும் வாழ்விற் சிறந்து—பயந்தொலைய
ஈடும் எடுப்பும் இலனாய் இறைவனையே
பாடும் பணிகொண்டாய் பண்டு.

27. பண்டு மறைந்த பரிதானப் பேயின்று
கண்டவிட மெங்கும் நின்று கத்துதையா !—தண்டு
கள்ளக் கறுப்புக்கடைக்காரர் மக்களிடம் [மிண்டாய்க்
கொள்ளை யடிப்பதென்ன கூத்து.

---

24. ஆட்சியின் மாட்சியைப்பற்றி விளக்கி 1876ல் எழுதிய பிரதாப முதலியார் என்னும் நாயகரின் முதல் நாவலில் ஞானம் பாள் என்னும் கதாநாயகியின் சார்பில் சுதந்திரத்தை நிலைநாட்டு கின்றார்—மற்றும் தமிழுக்காகவும், தமிழ் இசைக்காகவும் அரும் பாடுபட்டவர், நாயகர்தான் என்பது சொல்லாமலே விளங்கும்.

25. "பிரதாப முதலியார் சரித்திரம்" என்பது நாவல் உலகத்திற்கே முதன்மையானது என்பது எல்லோரும் அறிந்ததே. அத்துடன் சுகுண சுந்தரி, பெண்மதிமாலை, பெண் கல்வி, பெண் மானம், முதலிய பல நல்ல நூல்களையும் வசன நடையில் இயற்றி நாட்டில் நற்புகழ் பெற்றார்.

26. நாயகர், இறுதி வரையிலும் இன்ப வாழ்க்கை வாழ்ந்தது மன்றி "பாடும் பணியே பணி" என்பதையே மேற்கொண்டவர்.

27. பொல்லாத லஞ்சப் பேய் ஒழிய அரும்பாடுபட்டவர் நாயகர். "எதுக்கு வாங்குதீர் லஞ்சம். உமக்கு இதைவிட

28. கூத்தில் கலந்துகொண்டு கும்மாளம் கொட்டுகின்றார்
காத்திருந்த தீயபணக் காரர்களும்—பூத்தமலர்த்
தேனே! நியாயம் தெரிந்தவன்நீ ஆதலினால்
கோனே! நடுநிலைமை கூறு.

29 கூறும் மகளிர் குலம்நோக்கி எக்காலும்
ஊறின்றி அன்னார் உயர்ந்திடவே—வீறுபெறும்
மார்க்கம் விளங்க வகுத்தாய் பலநூல்கள்
ஆர்க்கும் அரியசெயல் ஆம்.

30. ஆமாம் உனைப்போலிங் கையா! தெளிகடையில்
தேமாங் கனியென நூல் செய்பவர்யார்?—தோ
செல்வ துரையே! திருவருள் மாலைதனில் [மிலாச்
சொல்வளம் மிக்க சுகம்.

31. சுகமாய் அந் தாதி தொடுத்தாய் அதற்கோர்
முகமாய்ப் பதிகம் மொழிந்தாய்—இகபரத்தை,
வைத்தே பதித்து வழங்கினை யாவுமுன்றன்
முத்தான தாகுமற்றை முன்.

வேறுண்டோ பஞ்சம்" என்றும் "சீச்சி லஞ்சம் வாங்கல் ஞாயமாமோ? அதனால் உம்மைச் சேர்ந்த தரித்திரம் விடிந்துபோமோ?" (சமரசக் கீர்த்தனை)

28. நாயகர் நேரிய முறையில் நீதி வழங்கியவர், ஆகவே "நியாயம் தெரிந்தவன் நீ......" எனப் பாடப்பெற்றது.

29. பெண்வர்க்கம் உயரவேண்டி "பெண் மதிமாலை", "பெண் கல்வி", "பெண் மானம்" "சோபனப்பாடல்" முதலிய பல நூல்களும் பின்னர் முதன்முதல் 1569ல் பெண்பாடசாலையும் அமைத்தவர் வேதநாயகரேயாவர்.

30. 18 3ல் "திருவருள்மாலை" என்னும் அருமையான ஒரு நூல் ஏசு கிருஸ்துவின்மீது பாடினர். அவை சொற்சுவை பொருட்சுவை பொருந்திய கவித்துறைகளால் அமையப்பெற்றது.

31. "திருவருள் அந்தாதி" என்னும் ஓர் அரிய நூல் செய்துள்ளார். மற்றும் "பெரிய நாயகியம்மன் பதிகம்" என்பது

32. முன்னேநீசெய்த முதல்நூலை மக்களின்று [வென்றால்'
பொன்னேபோல் போற்றிப் புகழ்கின்றார்—என்ன
தீர்க்க தரிசனமாய் தேர்ந்துரைத்த ஒன்வொன்றும்
பார்க்க மிகவியக்கும் பண்பு.

33. பண்பு நிறைந்த பலபுலவோர்க் கன்பினுயர்
நண்பரென ஏற்ற நலஞ்செய்தோய்!—விண்புகழ,
விற்பன்னர் என்னும் விருதுப் பெயர் பெற்றாய்
அற்புதமாம் உன்றன் அறிவு.

34. அறிவு துரையே! அழகு மகனே!
செறிவு மிகுந்தசெழுந் தேனே!—நெறிமுறையில்
சற்றும் பிறழாதத் தந்தையே! உன்றனையென்
சுற்றமெனச் சொல்வேன் துணிந்து.

ஒன்று. இவை இரண்டும் தேனினும் இனிய செழுஞ்சுவை பொருந்தியது.

32. நாயகர் செய்த ஆதிநூலாகிய நீதி நூலில் பல அரிய கருத்துக்கள் அடங்கிய கவிகள் உண்டு. அவைகள் அனைத்தும் தீர்க்க தரிசனமாய் சொன்ன விஷயங்களாகும். குறிப்பாக "புகை வண்டியூர்ந்துலகை கொடிக்குள்ளே சுற்றுவோம்......" யாக்கை நிலையாமை அதிகாரம் 40 (நீதிநூல்).

33. மகாவித்வான், முடிகொண்டான் பாரதியார் மற்று முள்ள அநேகப் புலவர்களுக்கு நல்லாதரவளித்தவர் நாயகர். தலை சிறந்த பல புலவர்களால் வேதநாயகர்க்கு "விற்பன்னர்" என்னும் அற்புதப்பெயர் கிடைக்கப்பெற்றது.

34. நாயகர் அறிவாற்றல் மாத்திரமன்றி அழகிலும் சிறந்தவராக விளங்கியிருக்கின்றார். அவரது திருவுருவப் படமே இன்றைக்குச் சான்று பகரும்.

35. துணிவான உள்ளம் சுகமான நோக்கம்
பணிவான வாக்கும் படைத்தாய்—அணிதிகழும்,
மேலாம் பொதுநெறியை வேண்டித் தவங்கிடந்தாய்
காலத்தில் பெற்ருய் கனம்.

36. கனதன மிக்கக் கவிஞர்பிரான் என்ன
அனுதினமும் போற்ற அமைந்தாய்—இனமும்
புலவர்தமைக் காக்கும் பொறுப்பையுமே ஆட்சித்
தலைவருக்குச் சொன்னதும் நீ தான்.

37. தானே கனிந்த தனிப்பழமே! வந்தவர்க்கு
வானே எனவழங்கும் வள்ளலே!—மாநிலத்தில்,
எல்லோர்க்கும் நல்ல எளிய தமிழ் நடையை
வல்லமையாய்ச் சொன்னுய் வகுத்து.

38. வகுத்துரைக்கும் தூய வனிதா மணியாம்
பகுத்தறிவு மிக்ககுணப் பாவை—அகத்தினிக்கும்,
ஞானப்பூ வென்னும்உயர் நல்ல தமக்கையினல்
ஆனத் திடம் பெற்ருய் அன்று.

---

35. சோம்பல் இன்றி என்றும் சுருசுருப்பாக இருப்பவர். தெளிவான சொல்லும் செயலும் உள்ளவர். கருணையும் வீரமும் கலந்த ஒருவர். சமரச நோக்குடையவர்.

36. அருளும் பொருளும் ஒருங்கே அமையப் பெற்றவர். மற்றும் புலவர் பெருமக்களை இன்று ஆட்சிபீடம் ஏற்று ஆதரிக்க முன்வந்துளது என்ருல் அது வேதநாயகரின் வேண்டுகோளே யாகும்.

37. நாயகரின் நூல்கள், பெரிதும் எளிய நடையும் இனிமை பயப்பனவாகவுமே இருக்கும். புதிய புதிய கருத்துக்களுடன் உணர்ச்சியூட்டும் உயிர்ப் பாடல்களாகும்.

38. "ஞானப்பூ அம்மையார்" என்பவர்கள் நாயகரின் தமக் கையார், இவர்கள் தெய்வபக்தியில் சிறந்தவர்கள். வாக்குப்பலித

39. அன்றே உலகம் அறிந்துன்னைப் போற்றிடவும்
நன்றே புரிந்து நனிசிறந்தாய்—மன்றலதும்
ஐந்தென்னச் சொல்லும் அதிசயமும் கண்டாயுன்
பைந்தமிழோ தெய்வீகப் பண்.

40. பண்ணாரும் காரைநகர்ப் பாப்பம்மாள் நற்குளந்தைக்
கண்ணான லாசர் கனபுதுவைப்—பெண்ணாகும்
மாணிக்கம் அண்ணாகண்ணா மற்றும் அம்மாள் என்
பாணிக் கிரகணத்தார் பார். [பவர்கள்

41. பாரோர் வியக்கும் படியாய் உயிர்மீண்ட
தாரோ எனில்நீயே அம்மம்ம!—தேரோடும்
வீதிதனில் வண்டி விழுந்து நொருங்கியவோர்
சேதிதனைக் கேட்டுதிகைத தேன்.

42. தேனார் மலர்ச்சோலை தேடியொரு பேரரவம்
ஏனோ? உனைவந் தெதிர்த்தனவோ?—மேனிதனைத்
தீண்டிடவும அந்தோநீ சேத்துப் பிழைத்தனையாம்
ஆண்டவனின் வாய்மை யது.

உடையவர்கள், இவர்களிடத்தில் நாயகருக்கு மிகவும் விசுவாசம் உண்டு.

39. வேதநாயகருக்கு ஐந்து தாரம். ஒருவர்பின் ஒருவர் மறைந்தனர்.

40. முறையே மனைவிகளின் பெயர், காரைக்கால் பாப்பம்மாள், இலாசர் அம்மாள், (ஞானப்பூ அம்மையாரின் மகள்) புதுச்சேரி மாணிக்கத்தம்மாள், அண்ணாகண்ணம்மாள், அம்மாள் அம்மாள். என்பதாகும்.

41. ஒரு சமயம் ஏறிச்சென்ற வண்டி குடை கவிழ்ந்து வீழ்ந்தது. வியக்கும்படி வேதநாயகர் உயிர்மீண்டார்.

42. மற்றொரு சமயம் நாயகரை, நாகம் ஒன்று தீண்டிற்று அதிலும் ஆச்சரியமாய் உயிர் தப்பினார்.

43. அதுவே பொருளென் றறிவுநூல் கற்று
முதுமையும் சார்ந்த முனிவர்—புதுமைமிகும்
வீரத் துறைசை நகர் வேந்தன் கருணைநலம்
சேரப் புகழ்ச்சிறந்தாய்த் தேர்ந்து.

44. தேர்ந்து தெளிந்தனன்நின் சேவை அனைத்தையும்நன்
கோர்ந்து பெரிதும் உவந்தனன்மெய்ச்—சார்ந்த
பிள்ளையென ஞானப் பிரகாசம் தன்னையும்ஓர் [வருட்
வள்ளலெனத் தந்தாய் மகிழ்ந்து.

45. மகிழும் மகவெனவே வாய்த்தவொரு முத்து
சகம்புகழும் ராஜாத்தி தங்கம்—சுகமுடனே
வாழும் படிநல் வரமும் படைத்தனைநீ
சூழும்அருட் ஜோதி சுடர்.

46. சுடர்தரு மேனித் தகைஉறு நெஞ்சம்
அடர்தரு மீசை அமைந்தோய்!—இடரறவே,
இன்றி யமையாத இன்பம் எனக்கருளி னாய்
நன்றி மறந்தறியேன் நான்.

---

43. திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகமூர்த்திகள். வேத நாயகரிடத்து மிகுந்த அன்பும், கண்ணியமும் வைத்திருந்தார். பல சமயம் நாயகரைப் பாராட்டிப் பாடியதுண்டு.

44. "ஞானப்பிரகாசம்" பிள்ளை என்பவர் நாயகரின் தலைப் பிள்ளை. மூன்றாவது தாரமாகிய மாணிக்கத்தம்மையாரிடம் பிறந்தவர். இவரது பிள்ளைகளும் பேரன் பேத்திகளும் இப்பொழுது சென்னையில் உள்ளனர்.

45. சவரிமுத்தம்மாள், இராஜாத்தியம்மாள், என இரு பெண் மகவைப் பெற்றிருந்தார். இப்பெண் மக்களுக்கென்றே நாயகர் "பெண்மதிமாலை", "பெண் கல்வி", பெண் மானம்" முதலிய மூன்று நூல்களையும் ஆக்கினார்.

46. நாயகர் புஷ்டியான மீசையுடையவர், அன்றியும் அழகு கொழிக்கும் நல்ல திடமான திருமேனியுடையவர்.

47. நானே தவமுடையேன் ஞான மறைமுதல்சீ
மானே! என் உள்ளகத்தே வாழ்பவனே!—தேனே!
வடமொழியும் தென்மொழியும் வன்மொழியும்நோக்கக்
கடலாம்நீ கற்ற கலை.

48. கலைப்புலவன் என்ன கதிக்குமொரு கூட்டத்
தலைப்புலவன் நீயென்னல் சாலும்—இலையெனவே,
சொல்லுபவர் யாரே? துரையே! உனையெதிர்த்து
வெல்லுபவர் உண்டெனலும் வீண்.

49. வீணர்களைக் கண்டு மிகநொந்து நைந்துருகித் [கில்
தோனும்ஒரு வார்த்தைச் சொலவந்தோய்!--மானுல
புண்ணியம்போல் பாபமெனப் போந்த கவிபுனைந்தாய்
கண்ணிய மான கருத்து.

50. கருத்துக் கிசைந்த கனிரசமே! அன்பர்
வருத்தம் அகற்றும் மருந்தே!—பெருத்த குண,
அட்டாவ தானம் அகமகிழு மாறேதும்
தட்டா தளித்தனையே சாத்து.

---

47. மறைமுதல்—வேதநாயகம்—ஆரியம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளையும் முறையே கற்று தேர்ந்தவர்.

48. நாயகர், புலவர் திலகமாய் விளங்கியவர்.

49. "புண்ணியம்போல் பாபம்" (சமரசக்கீர்த்தனை), இப்பாடலில் கள்ள ஞானிகளைப்பற்றி கடிந்து கூறியுள்ளார்.

50. பூவை, அட்டாவதானம் கலியாணசுந்தர முதலியார், ஒரு சமயம் நாயகர் இயற்றிய முதல் நாவலாகிய பிரதாப முதலியார் சரித்திரம் வேண்டுமென விரும்பி இருபாடல்கள் எழுதியுள்ளார். அவை, "காசல்ல......" "விண்ணப்பால்......" (வி-வரலாறு) பூவையார் விரும்பியபடியே புத்தகமும சாற்றும் பெற்றூர்.

51. சாத்துவீர் மாலை சமைத்தசுடு சோற்றினைவைத்
தேத்துவீர் காளி எதிர்நின்று—மாத்தமிழீர் !
மக்கள் பசிப்பிணியை மாற்ற வகையறியீர்
எக்காளம் எற்றுக்கென் றீர்.

52. என்றும் கிறிபேசி எய்த்துப் பிழைக்குமொரு
மன்றம் எனப் பலகை மாட்டிநிற்கும்—துன்றும்
சவுளிக் கடைக்காரர் தான்திருந்து மாறு
கவுளிபோல் சொன்னாய்க் கவி.

53. கவிக்கம்பன் என்னவே கற்பனைகள் அள்ளிக்
குவிக்குவிய லாகக் குவித்தோய் !—செவிக்கினிய,
இன்னிசைப் பாவும் இசைத்தே இசைபெற்றாய்
தின்னிசையே என்றும் நிசம்.

54. நிசமான ஞான நிலையடைந்தார் போல
கசமாய்ச் சடைபரப்பிக் காட்டும்—திசையறியா
வெற்றர்களைக் கண்டு வெகுண்டு சுயம்பாடி
உற்றதைநீ சொன்னதுவும் உண்டு.

---

51. காளி கோயில் ஒன்றில், சில பாமரமக்கள் அன்னம் முதலியவைகளை வைத்துப் படைத்துவேண்டி நின்றதுகண்டு அவர்களுக்கு அறிவுறுத்துவான்வேண்டிப் பாடியது. "அன்னம் பசித்தவர்க்கு ஈயீர்......" (வி-வரலாறு).

52. கிறி—பொய். ஜவுளிகடைக்காரர்களின் தில்லுமுல்லுக் கிரங்கிப் பாடியது. "கட்டிய கந்தல் புதிதென்று......" (வி-வரலாறு).

53. நாயகர் பாடிய பாடல்கள் அளவிறந்தன. அத்தனையும் இனிமை பயக்கும் இசையுடன் கூடியதாகும்.

54. பொய் வேடம்பூண்டுத் திரியும் ஒழுக்கமில்லாத சடைத் தம்பிரான்கள் தலைகுனியப்பாடியது "பெண்ணைச் சடையில் வைத்தவன்போல்"...... (வி-வரலாறு).

55. உண்டான மேகமெலாம் ஊரிலுள்ள தாசிகளின்
தொண்டான தேகமதில் தோய்ந்திடவே—மண்டலத்
மாரி பொழிய வசமில்லை என்றுநீர் [தில்
வீரியமாய்ப் பேசினது மெய்.

56. மெய்யாய் மறையவர்போல் வேடம் புனைந்துதாம்
ஐயரென்றும் சொல்லி அகங்கரித்தே—செய்யாத
செய்கையெலாம் செய்யும் சிறுகூட்டம் ஓர்ந்திட
சைகையதும் செய்தாய் சரி. [வோர்

57. சரியான சூடன்று தந்தாய் கொடிய
வரிவாங்கும் மூட மனிதர்க்—கரிதான
வார்த்தை பலவும் வழங்கினுய் பார்த்தேன் நன்
நேர்த்தியினுள் ஞான நிலை.

58. நிலைகுலை யாத நெடியநல் வாழ்வும்
கோலைபுலை நீத்தார்தம் கூட்டும்—கலைவளமும்
இன்பம் கொழிக்கும் இசைத்தமிழும் உண்மையருள்
அன்பும் பெருகளனை யாள்.

---

55. வானத்தில் மேகமின்றி மழை பொழியாத காரணம் தாசிகளின் தேகங்களில் சார்ந்துவிட்டது. ஆனல் காசைக் கொடுப்பவர்களுக்கு தட்டாது மேகத்தைத் தருவர் என்று மிக வேடிக்கையாகப் பாடியுள்ளார். "மேகங்கள் யாவும்......" (வி-வரலாறு).

56. ஆச்சாரம் கெட்ட அர்தணர்களைக் குறித்துப் பாடியது. "ஆரணவாயினர் மாடு ஆடுகளை......" (வி-வரலாறு).

57. வெள்ளம் முதலியவைகளினுல் நேர்ந்த சேதத்தின் போதும் தள்ளுபடியில்லாமல் கரேமுறையில் வரிவசூலிக்க வந்தவர்களைக்குறித்து மிக அழகாகப்பாடி அவர்களுக்கு அறிவுறுத்தினுர். ("உழவுக்கு மரமேண்டு......") (வி-வரலாறு).

58. நாயகர் கொலை, புலைநீத்த உயர்ந்த சைவப் பாங்குடையவர்.

59. ஆளும் முடிமன்னர் ஆயினும் என்? நாவிதர்போல்
தோள்தட்டி பின்னும் தொடைதட்டி—நீள ஒரு
கத்தியைத் தீட்டியே காசு பரிப்பவர் யார்?
புத்தியுள்ளார் என்றீர் புரிந்து.

60. புரியும் படியாய்ப் புகன்றீர் உலகம்
தெரியும் படியெல்லாம் செய்தீர்—பெரியபொருள்
என்றே பலரும் எடுத்தேத்த யாவரையும்
வென்றே படைத்தாய் விருது.

61. விருது பெறநல்ல வேளையிலே காளை
ஒரு ஜதை ஈந்தார் ஒருவர்—கருதிடவே,
முட்டும் கழியும் முழுப்போரும் தின்னுமெனத்
திட்டமாய்ச் சொன்னீர் சிறப்பு.

62. சிறப்புக் கவிபாடிச் செல்வர்தமை ஏத்தும்
மறப்புலவோர் எல்லாம் வருந்த—அறப்பயிராம்,
செந்தமிழின் உண்மைத் திறத்தை எடுத்துரைக்க
வந்ததினல் வந்ததுநல் வாழ்வு.

---

59. நாவிதர்களைக் குறித்து நாயகர் ஒரு சமயம் வேடிக்கையாய்ப் பாடத்தொடங்கினர், அதில் பல ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்து கிடக்கின்றன "நெடுமுடி பூண்ட அரசர் எனினும்......" (வி-வரலாறு).

60. நாயகர் எதிலும், எப்பொழுதும் தோல்வியில்லாதவர்.

61. முதலியார் ஒருவர் வாங்கி அனுப்பிய வண்டிக்காளைகள் சண்டிக்காளைகளாய் இருப்பது குறித்து பாடியனுப்பியது "இட்ட மு'-ன் முதலியார்......" (வி-வரலாறு).

62. காசு குறித்துக் கசடர்களைப்பாடும் கவிராயர்களை நோக்கிப் பாடியது "அருங்கிரியே கற்பகமே......" (வி-வரலாறு)

63. வாழ்வுக் குறுதுணையாய் வந்த மனைவியிடம்
சூழ்நிலை தேராது சொன்னவொரு—பாழும்
புலவனது பாட்டின் பொருள்விரித்தாய் விந்தை
நிலவும் படியாய் நிறுத்து.

64. நிறுத்துப் புகலும் நிலையுடையார் என்ன
பொறுத்துப் புகன்றனையோர் போதம்—மறுத்
ஆரே? உலகில் அருளே வடிவாம் உன் [துரைப்பார்
பேரே அதற்குரிய பெட்பு.

65. பெட்பார் தனக்கோடி பிள்ளை யெனும் நல்ல
நட்பாளர் வாழ்க்கை நனிசிறக்க—உட்பொருளாய்ப்
பல்வளமும் வைத்துகவிப் பாடினாய் அப்பாடல்
வல்வழக்கைத் தீர்த்துதவும் மாண்பு.

66. மாண்பார் துறைசை மணியடிகள் நேரிலுனைக்
காண்பார் உளத்தே களிததிடுவார்—வீண்பொழுது
போக்கா துழைக்குமோரு புண்ணியவான் என்ன
வாக்கால் உரைத்திடுவார் வந்து. [அருள்

---

63. கவிஞன் ஒருவன் தான் கற்ற வித்தையை மனைவியிடம் காட்டியபோது பாடியது "சுந்தரியே புறமேகி......" (வி-வரலாறு).

64. வேதநாயகர், அளவறிந்து பாடுவதில் அதிசமர்த்தர்.

65. காரைக்கால் கனதனவான் ஆகிய "தனக்கோடி" என்பவரைக்குறித்து சிறப்புக்கவி செய்தனுப்பியது "உனக்கோடியலைவதே......" (வி-வரலாறு).

66. ஆவடுதுறை தம்பிரான் சுவாமிகள் நாயகரைக்குறித்துப் பல நல்ல பாக்கள் பாடியுள்ளார். அவைகள் அத்தனையும் பொருள் பூரிப்புடையதாகும். "அன்று கண்டனன்......" (வி-வரலாறு).

67. வந்தித்தேன் ஐயா! மனத்தால் உனைநன்கு
சிந்தித்தேன் பொற்சபையார் சிற்சபையில்—சந்தித்
புத்தம் புதிய பொதுநெறியாம் மெய்நெறியை [தேன்
இத்தரையிற் பெற்றேன் இனிது.

68. இனிதாம் மனிதஉரு வென்னும் துறைசைப்
புனிதர்தமைக் கண்டு புகழ்ந்து—தனிமையினில்,
ஊர்வந்து சேர்ந்தேன் உளம்வந்து சேரவிலைப்
பாரென்று கூறினை ஆள் பார்த்து.

69. பார்த்தாய்ப் புலவர்மகன் பாரப் பசிப்பிணியைத்
தீர்த்தாய்க் கலநெல்லும் சேர்ப்பித்தாய்—மூர்த்தி
நீயே கருணை நிதியெனவே சொல்லும் நிலை [களால்
ஆய புகழீந்த தன்பு.

70. அன்பு கொழிக்கும் அருட்கோவை காழிநகர்த்
தன்பமறத் தந்தார்நற் சுந்தரனார்—முன்பதற்கு,
ஆண்டவனை நேரில் அழைத்து நிறுத்திகவி
நீண்டதெனத் தந்தாய் நினைந்து.

---

67. பொற்சபை சிற்சபை—புருவ மத்தியஸ்தானம்.

68, ஆதீனத்தலைவர் சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளிடம் நீண்ட நேரம் பேசிக்களித்து மீண்டு சென்று பாடியனுப்பியது "சூர்வந்து வணங்கும்......" (வி-வரலாறு).

69. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மகனைக்குறித்துப் பண்டாரச் சந்நிதிகளிடத்து பாடியனுப்பி நெல்லளக்கச் சொல்லியது. "பல்லார் புகழ்......" (வி-வரலாறு).

70. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய "சீகாழிக் கோவை"க்கு நாயகர் ஒரு சிறந்த சாத்துக்கவி யளித்தார். அதில் ஆண்டவனை நேரே அழைத்து ஆணைபண்ணச் சொல்லுகின்றார். "விதி யெதிரில் அரிமுதலோர்......" (வி-வரலாறு).

71. நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து
புனைந்துகவிப் பாடும் புலவன்—இனமாம்
புதுவை சவ ராயலுவின் பூந்தமிழைக் கண்டு
பொதுவில் அளித்தாய்ப் புகழ்.

72. புகழ்மிகுயாழ்ப் பாணப் புலவர் ஒருவர்
திகழும் உயர்கல்விச் செல்வர்—மகிழுறுபேர்
தாமோ தரமாம் தரந்தேர்ந் துணைவில்லி
யாமோ ? எனவியந்தார் ஆண்டு.

73. ஆண்டு களித்து அருங்கலையா வுங்கற்று
வேண்டும் புகழெய்தி மேதினியில்—காண்டிபராய்
முன்னே கபித்தலம்வாழ் மூப்பனார் தன்கவிக்குப்
பொன்னே எனத்தந்தாய் போற்று.

74. போற்றும் நகைச்சுவையில் பூவில் உனக்குநிகர்
எற்றவர் யாரும் இலையென்றே—சாற்றுவேன்,
மெய்யாய் உனக்கந்த வித்தைப் படிப்பித்த
துய்யனையென் உள்ளம் தொழும்.

---

71. புதுவை, சவராயலு நாயகர், என்பவர் அருளும் பொருளும் ஒருங்கே அமையப்பெற்றவர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சீடர். அவர் மரியன்னையின்மீது பாடிய நூலுக்கு "ஏர்கொள் சவராயலு" நாயக தீரா!......' (வி-வரலாறு) என்று பல பாடல்கள் பாடியுள்ளார்.

72. யாழ்ப்பாணம் பெரும்புலவர் சி. வை. தாமோதரம் பிள்ளை (B.A.B.L.) அவர்கள் நாயகரைக்குறித்து "வில்லிபுத்தூரன் நிகர் வேதநாயகன்" (வி-வரலாறு) என்று வியந்து கூறினார்.

73. கும்பகோணத்தைச் சார்ந்த "கபிஸ்தலம் துரைசாமி மூப்பனார்" என்னும் செல்வச் செம்மலார் பாடிய நூலுக்கு நாயகர் கொடுத்த சாத்து "மண்வைத்த படரோன் அன்ன மாதுரைசாமி மன்னன்......' (வி-வரலாறு).

74. விற்பன்னர் விகடமாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் மிகச்சிறந்தவர்.

75. தொழுவே வினையனைத்தும் சோர்ந்து தலைக்கீழ்
விழவே எமனையும்நீ வென்றாய்—பழுதறவே,
பாடினாய் ஈசன் பதமே சதமெனவே
சூடினாய் சென்னிமிசைத் தோய்ந்து.

76. தோய்ந்து பழகியபின் சொந்த மனைவியுடல்
சாய்ந்து விழுந்த சமயத்தில்—ஆய்ந்துநீ
சொன்னஒரு பாட்டின் சுவையினைத்தான் என்
அன்னமே என்ன அழைத்து. [னென்பேன்

77. அழைத்தே அரன்வாயில் அன்பர் மிகவும்
உழைத்தே அழகுதமிழ் ஓதி—தழைத்தெதன
போற்றும்நின் அந்தாதி புத்தகத்தைக் கேட்டகவி
ஈற்றினில் வைத்தார் இசை.

78. இசையால் உலகை இழுத்தாய்இ லேசில்
அசையாத பேருள்ளம் ஆர்ந்தாய்—திசையெங்கும்,
நல்லோன் எனப்பெயரை நாட்டினாய் என்றுமுனக்
இல்லாமை என்ப (து) இலை [(கு)

---

75. நாயகர் பாடல்களில் வீரம், கருணை, பக்தி ஹாஸ்யம் அனைத்தும் கலந்திருக்கும்.

76. மூன்றும் மனைவியாகிய மாணிக்கத்தம்மாள் இறந்த போது மனமுருகிப் பாடினர். "ஆண்டபண்ட மெல்லாம் அழியா திருக்க..." (வி-வாலாறு).

77. அரன்வாயில் வேங்கடசுப்பா பிள்ளை என்னும் உயர்ந்த புலவர் ஒருவர் நாயகரின் "திருவருள் அந்தாதி" என்னும் புத்தகம் வேண்டி மிக அருமையாகப் பாட்டால் பாடிக் கேட்டுள்ளார். "சொல்லும் பொருளும் சுவையுடைத்தாய் ஏசுவின்மேல்..." (வி-வரலாறு).

78. இசை நயத்தால் உலகத்தை வசப்படுத்தியவர் வேத நாயகர்.

79. இலையென்பார் தெய்வம் இனிதாம்இவ் வாழ்வே
நிலையென்பார் நாளை நினையார்—கலையுரைத்த
கற்பனையுட் சிக்கிக் கதைப்பர் அவர்களுக்கோர்
சொற்புனைந்து தந்தனை நற் சூடு.

80. சூடுந் தலைப்பாகைத் தூய நிறமெனவே
தேடும் உடையிலும்ஓர் சீர்பெற்றாய்—நீடு,
தவமும் புரிந்தாய் தமிழுலகம் செய்த
பவமும் தொலைத்தாய்ப் பரிந்து.

81. பரிந்தொரு வார்த்தைப் பணத்தின் குணத்தைத்
தெரிந்துநீ சொன்னாய்த் தெளிவாய்ப்—பொருந்துவ
பேசும்புரட்டுக்கும் பெண்பேய் எனச்சொல்லும் [தாய்
தாசிக்கும் தந்தாய்ச் சவுக்கு.

82. சவுக்கமாய்ச் சொன்ன சகலமும் இந்தப்
புவிக்கிற்றைப் போதைக்குப் போதும்—சுவைக்கும்
அன்பும் அறிவும் அறமும் பொருளுமற் [அருள்
றின்பப் பெருக்கமும்உண் டின்று.

---

79. தெய்வம் இல்லை யென்று வாதிப்பவர்களுக்குச் சரியான காரண காரியங்களுடன் விளக்கி வைத்ததோடு சொல்லம்பு போன்று சூடும் கொடுத்தார் "தேவனே இலனேல் .." (நீதிநூல்).

80, நாயகர் வெள்ளிய தலைப்பாகையும் நீண்ட அழகிய அங்கியும் அணிந்து காண்பார் வியக்கக் காட்சியளிப்பவர்.

81. "பணமே உன்னால் என்ன குணமே..." "புரட்டெல்லாம் எங்கே படித்துக் கொண்டனை..." "மறு, மாதரை நினையாதே..." (சர்வசமய சமரசக் கீர்த்தனை).

82. இன்றைய உலகிற்கு ஏற்றவண்ணம் இனிதாகவும், எளிதாகவும், 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்" என்னும் சட்டப் படியும் பாடியுள்ளார்.

83. இன்றைய நாட்டின் இயல்புக் கமைந்தபடி
அன்றே உரைத்தாய் அழகழகாய்—என்றென்றும்,
அச்சமிலை என்னவே ஐம்பான் அறுபுலவோர்
மெச்சுதலும் பெற்றதொரு வீறு.

84. வீறு படைத்தாய் விளங்கும் இளங்குமரப்
பேறு படைத்தாய்ப் பெருமையுற்ருய்—கூறுமதி
மன்னவன் தன்வலிமை வாளிஞல் இல்லையெனச்
சொன்னநருள் இன்பச் சுவை.

85. சுவையான வார்த்தைத் துடியான பேச்சு
நவையேதும் இல்லா நளினம்—இவையாவும்
பார்த்ததுமின் பாலே பரிந்தென் மனக்கவலை
தீர்த்ததுமின் தீரச் செயல்.

86. செயல்குலை யாதச் செழுஞ்செல்வம் என்றே
இயல் உலகம் வாழ்த்தும்உனை என்றும்—மயலறவே,
ஒவியர்நீள் என்ருேர் உயர்கற்பின் மாண்புரைத்த
பாவின் பெருமைதனிப் பாங்கு.

---

83. நீதி நூலுக்கு 56 அரும்பெரும் புலவர்கள் ஒருங்கே உயர்ந்த சாத்துக்கவிகள் வழங்கியுள்ளார்கள்.

84. ஆட்சிபுரியும் வகையைப்பற்றி "மன்னவன் தன் வலிமை வாளிஞல் இல்லையென...." (நீதி நூல்) மிக அழகாகக் கூறியுள்ளார்.

85. நாயகரின் வாக்கு மனக்கவலை மாற்றும் மருந்து எனச் சொல்லலாம்.

86. கற்பு எனப்படுவது ஆண் பெண் இருசாரார்க்கும் உரிய தானது என்பதை மிக்கச் சுவையுடன் சொல்லுகின்ருர். | "ஒவியர் நீள் சுவரெழுந்தும் ஓவியத்தைக் கண்ணுறுவான்...." (நீதி நூல்).

87. பாங்காய்க் கதைகள் பலசொன்னாய்ப் பின்னொன்று
சாங்காலம் ஓர்பிசினன் தான்சுமைதான்—தாங்காது
பட்ட பெரும்பாட்டைப் பாட்டாய் விளக்கினை உன்
சட்டமே சட்டம் சமர்த்து.

88. சமர்த்தாய் உலகச் சழக்கினைக்கண் டோர்கை
அமர்த்தினாய் நட்பம் அறிந்தாய்—நிமிர்த்திடவே,
அல்லும் பகலும் அரும்பாடு பட்டாயுன்
பல்லவியே சொல்லுமொரு பால்.

89. பால்போலும் உள்ளம் படைத்தாய் பயன்தரும்நன்
னூல்போலும் இன்ப நுகர்ச்சியுற்றாய்—ஞாலமிசை
செல்வக் கவியெனவே செப்பும் தகைமைபெற்றாய்
பல்வளமும் காட்டுமுன்றன் பாட்டு.

90. பாட்டால் உனதுபுகழ்ப் பாடும் ஒருவரிடம்
கேட்டாலும் தீமை கிடையாதே—நாட்டிலிதைச்
சத்தியமாய்ச் சொல்வேன் தனிப்பேர் முரசறைவேன்
சித்தியெலாம் உண்டு திடம்.

---

87. பிசினன் என்னும் உலோபியின் நிலையை ஒரு பாட்டில் வேடிக்கையாக விளக்குகின்றார். "சாங்காலையோர் பிசினன் பொருள் தானம் செய உன்னி...." (நீதி நூல்).

88. நாயகரது ஒவ்வொரு பாட்டின் பல்லவியும் புதுமையாகவும் பொதுமையாகவும் இருக்கும் (சமரசக் கீர்த்தனை—சத்திய வேதக் கீர்த்தனை).

89. இறுதிவரை வறுமையின்றி செல்வச் சிறப்புடன் வாழ்ந்த செழுந் தமிழ்க் கவிஞர் வேதநாயகர் அவர்கள்.

90. நாயகர் நூலை நன்கு உணர்ந்தவர்கள், திருந்துவர் என்பது திண்ணம்.

91. திடமாய் எதையும் செயவல்ல நின்னை
அடமாய்க் கொடுசென்ற தந்தோ!—மடமான
காலத்தின் கோலத்தை நீயே கணித்துரைத்தாய்
ஜாலமெனும் ஓர்சொல் தரும்.

92. தருசீர் தருபேர் தருநிலைக ளெல்லாம்
மிகுநின்னை அந்தோகை விட்டோம்—வெகுவாக
வந்தறுபான் மும்மை வயதில் மறைந்தனையே
எந்தையே! நீவிரைந்த தேன்?

93 ஏனென்று கேட்பார் இலையோ? உனைக்கல்வி
மானென்று கூற மறந்தனையோ?—வானகத்து
நல்விருந் துண்ண நடந்தனையோ? அந்தோஎன்
செல்வமே! ஏன்போனாய்ச் செப்பு.

94. செப்புச் சிலையல்ல செம்பொன் வடிவாகும்
ஒப்பத் தருந்த ஒருபேரன்—எப்பொழுதும்
உன்னையே எண்ணி உருகிக் கதறுகின்றான்
என்னையோ சொல்வாய் இதற்கு.

---

91. காலம் செய்யும் கோலத்தை மிக நன்றாகக் கணித்துள்ளார். "ஓகோ காலமே உன்போல் எவர்க்கு உண்டிந்திர ஜாலமே (சமரசக் கீர்த்தனை).

92. வேதநாயார் 63 ஆண்டுகள் உலகில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்தார். பிறந்தது 1826. மறைந்தது 1889.

93. கல்விச் செருக்கில்லாதவர்.

94. நாயகரின் நேரான பேரன் ஆரோக்கியசாமி பிள்ளை (ஞானப்பிரகாசர் மகன்) இவர் இப்பொழுது சென்னையில் இருக்கின்றார். அன்பும் அறிவும் படைத்த சிறந்த கருணைச் செம்மல்

95. இதற்குட் பிரிந்தனையே என்னஅநி யாயம்
எதற்கும் கவலையிலை என்றாய்—அதற்குள்ளே,
பூசைக் கனைவரையும் போகும் படிச்சொல்லி
ஆசையதும் காட்டிமறைந் தாய்.

96. மறைந்தாய் சிறந்தபல மக்கள்தம் உள்ளத்
துறைந்தாய் தரத்தில் உயர்ந்தாய்—குறைந்தமதிக்
கூட்டமும் நாட்டம் கொளும்படியாய் பல்வேறு
பாட்டும் கொடுத்தாய்சிப் பாய்.

97. சிப்பாய் மகனே! ஜெகத்தில் உனக்குநேர்
ஒப்பாய் எவரை உரைப்பேன்யான்—அப்பா!
அநுபூதி மானே! என் ஐயா! உனையோர்
மனுவெனவே சொல்வேன் மதித்து.

98. மதித்தார் அனைவரும்நல் வாழ்வடைந்தார் உள்ளே
பதித்தாரும் அந்தப் படியே—துதித்தாரும்
நீங்காத செல்வம் நிறைந்தே தலைசிறந்(து)
ஓங்கினர்இ துண்மைஇதுண் மை.

---

95. இறுதி நேரத்தில், எல்லாரையும் கோயில் பூசைக்குப் போய் இறைஞ்சும்படிச் சொல்லி அனுப்பிவிட்டு நாயகர் சாந்தம் தவழும் முகத்துடன் மகா சமாதி நிலையடைந்தார்.

96. தாயை வணங்கத் தவறியவர்களுக்குச் சரியான சூடு கொடுக்கின்றார். "பிரிவினைக்காரரே வாரும்...." (சத்தியவேதக் கீர்த்தனை) (ஈங்கு பரன்பாடுபட்ட இன்னுடலே உன்னுடலாம் (தேவமாதா அந்தாதி).

97. ஆதியில் நீதி வகுத்தது மனு. பின்னர் திருந்தியமுறையில் செய்தவர் நாயகர். அதை மிக அழகாக எடுத்துச் சொன்னவர் வடலூர் இராமலிங்க வள்ளல்" வளங்கொள் குளத்தூர் அமர்ந்த...." (வி-வரலாறு).

98. நாயகரைப் பின்பற்றுகின்றவர்கள் நல்ல உயர்ந்த நிலையடைவார்கள் என்பது உறுதி.

99. உண்மைக் கழிவோ ஒருநாளும் இல்லையென[யில்அக்
வேண்மையாய்ச் சொல்வர் வெருபேர்கள்—அண்மை
காட்சியினை உன்னிடத்தே கண்டேன் அதற்குற்ற
சாட்சியுன்றன் பேரே தரும்.

100 தரும துரையே! தயைமேவும் ஐயா!
அருமை மிகும்என் அரசே!—திருவேத
நாயகமே! என்றும் நலமே தருமுன்றன்
தூய செழுந்திருவாய்ச் சொல்.

தமிழும் இசையும் தழைத்தோங்குவதாக
வேதநாயகரின் மாண்பு விளங்குவதாக.

வாழ்க வையகம்.

வேதநாயகரின் விரிவான வரலாறு

விரைவில் வெளிவரும்

திரு. சரவணபவானந்தர் வணைந்தது.

---

99. வேதநாயகர் ஆணை தவறாது நேரான பாதை கண்டு நடந்து நிலைத்த புகழ் பெற்றவர்.

100. அறநெறி யுணர்ந்து அன்பும், அருளும், பொருளும் பொருந்த வாழ்ந்தவர், வேதநாயகர் என்னும் விற்பன்னரேயாவர்.

சிறப்பு

ஜீவபந்து T. S, ஸ்ரீபால்

அமைப்பாளர்

தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபை சென்னை.

பேரறிஞர் நீதிபதி வேதநாயகம் பிள்ளை அவர்களின் சர்வ சமய சமரசக் கீர்த்தனை என்ற அறிவு சான்ற நூலினை யான் சிறுவயதிலிருந்தே படித்துப் படித்து இன்புறுவதுண்டு. அக் கீர்த்தனைகளைப் படித்து மகிழும் போதெல்லாம் இத்தகைய சிறந்த கவியமுதை அளித்த பேரறிஞரின் வரலாற்றை அறிய முடியவில்லையே என எண்ணியது முண்டு. நல்ல வேளையாக இன்று அறிஞர் சுவாமி சரவணபவானந்தர் அவர்கள் கவிஞரின் வரலாற்றை அந்தாதி வெண்பாக்களால் இயற்றி என் போன்றோர் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கச் செய்து விட்டார்கள். சுவாமி சரவணபவானந்தர் அவர்களை யான் கடந்த இருபது ஆண்டுகளாகவே அறிவேன். அவர் தம் அறிவும் கவியியற்றும் பண்பும் எதிர் காலத்தில் தமிழகத்திற்குப் பெரும் பயனை அளிக்கும் என எண்ணிய எனது எண்ணம் இன்று பல துறைகளிலும் பலித்து வருதல் கண்டு உள்ளம் களிபேருவகை யெய்துகின்றது.

சுவாமி சரவணபவானந்தர், அவர்கள் தமது அறிவாற்றலை கவிஞர் நீதிபதி வேதநாயகம் பிள்ளை அவர்களின் வரலாற்றை வெளிப்படுத்தியதன் வாயிலாக தனிச்சிறப் பெய்து விட்டார்கள், தமிழகம் நீதிபதி வேதநாயகம் பிள்ளை அவர்களை மறவாது போற்றுவது போன்றே சுவாமி சரவணபவானந்தர் அவர்களையும் மறவாது நன்றி செலுத்தவும் கடமைப் பட்டிருக்கின்றது. வாழ்க சரவண பவானந்தர்! வளர்க அவர் தம் இயற் கவிகள்!!

T. S. ஸ்ரீபால்.

வேதநாயகரின் வியன்மிகு நூல்கள்

1. நீதிநூல்
2. பிரதாப முதலியார்
3. சுகுணசுந்தரி
4. பெண்மதி மாலை
5. பெண் கல்வி
6. பெண்மானம்
7. சமரசக்கீர்த்தனை
8. சத்திய வேத கீர்த்தனை
9. திருவருள் மாலை
10. திருவருள் அந்தாதி
11. தேவமாதா அந்தாதி
12. தேவ தோத்திரமாலை
13. பெரிய நாயகிபதிகம்
14. சித்தாந்த சங்கிரகம்
15. சோபனப்பாடல்
16. தனிப்பாடல்

நாயகர் பெற்ற நற்பரிசு

1. குளத்தூர் ஐந்திணைக் கோவை
   (திரிசிரபுரம், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)
2. நீயே புருஷ மேரு
   (ஆனதாண்டவபுரம் கோபால கிருஷ்ண பாரதியார்)
3. ஐம்பான் அறுபுலவர்
   (தலை சிறந்த பலபுலவர்கள் பாடியது)

நாயகர்மீது சரவணபவானந்தர் இயற்றியது

1. விற்பன்னர் அற்புதகீதம்
2. நீதிபதி நாடகம்
   (நாயகரின் வாழ்க்கை விளக்கம்)
3. வேதநாயகர் அந்தாதி
4. விற்பன்னரின் விரிவான வரலாறு
5. நாயகரின் நகைச்சுவைத் திரட்டு

விளக்கத்திற்கு :

" விற்பன்னர் பதிப்பகம் "

22 மலையப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.